FWC

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

Field Work Centre

தவணைப் பரீட்சை மார்ச் - 2019

Term Examination, March - 2019

தரம் :- 13 (2019)	புவியியல் - I	நேரம் :- 3 மணித்தியாலம் மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடம்

அறிவுறுத்தல்கள் :-

- இவ்வினாத்தாள் மூன்று பகுதிகளைக் கொண்டது. பகுதி I, 40 பல்தேர்வு வினாக்களைக் கொண்டுள்ளது.
- பகுதி I இற்கான விடைகள் இவ்வினாத்தாளிலேயே எழுதப்படவேண்டும். ஒவ்வொரு சரியான விடைக்கும் ஒரு புள்ளி வழங்கப்படும்.
- பகுதி II இல் உள்ள வினாக்கள் இரண்டிற்கும் விடையளித்தல் வேண்டும் பகுதி III இல் நான்கு வினாக்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் இரண்டிற்கு விடையளித்தல் வேண்டும்.
- இப்பத்திரத்திலுள்ள வினாக்களுக்கு விடையளிப்பதற்கு இலங்கை இடவிளக்கப்படத்தின் ஒருபகுதி, உலகப்படம் என்பன வழங்கப்படும்.

பகுதி I

❖ *1 - 40 வரை தரப்பட்ட வினாக்களுக்கான சரியான விடைக்குரிய இலக்கத்தினைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.*

1) 1 : 50,000 அளவுத்திட்டத்தில் வரையப்பட்ட இடவிளக்கப்படத்தில் எடுத்துக்காட்டப்படும் நான்கு நெற்காணித்துண்டுகளின் நீளமும் அகலமும் கீழே A, B, C, D என வரிப்படங்களில் காட்டப்பட்டுள்ளன.



இவற்றுள் 1 சதுர கீலோ மீற்றர் பரப்பளவைக் கொண்ட நெற்காணிததுண்டினைக் காட்டும் வரிப்படத்திற்குறி எழுத்தினைக் குறிக்கும் விடையைத் தெரிவு செய்க.

1) B 2) A 3) D 4) C 5) E

( )

2) 1:50,000 இடவிளக்கப்பட்டத்தில் ஜீப் வண்டிப்பாதை அல்லது பிற வீதிகளைக் சரியாகக் குறித்துக் காட்டும் விடையைப் பின்வரும் குறியீடுகளிலிருந்து தெரிவு செய்க.

1) ═══════ 2) - - - - - - - - 3) ▒▒▒▒▒▒▒▒

4) ──►- - - - ◄── 5) ─┼─┼─┼─┼─ ( )

agaram.lk

3) A, B, C என வரைந்து காட்டப்பட்டிருக்கும் வடிகாலம்சங்களைச் சரியாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க .



1) கங்கண வடிகால், ஆரை வடிகால், சட்டத்தட்டு வடிகால்
2) மரநிகர் வடிகால், கங்கண வடிகால், ஆரை வடிகால்
3) ஆரை வடிகால், கங்கண வடிகால், சட்டத்தட்டு வடிகால்
4) சட்டத்தட்டு வடிகால், மரநிகர் வடிகால், ஆரை வடிகால் ( )

4) 1: 50,000 இடவிளக்கப்படத்தில் முனை, மணற்றரை, கழிமுகம், களப்பு, தீவு போன்ற பௌதிக அம்சங்கள் உள்ளடக்கப்படும் வகுதி
1) வடிகால் அம்சங்கள் 2) கரையோர அம்சங்கள்
3) தரைத்தோற்ற வேறுபாடுகள் 4) இயற்கைத் தாவரங்கள்
5) நீர் வடிகால் வடிவங்கள் ( )

5) புவியியல் தகவல் முறையில் காவித்தரவுகள் மூலம் தரவுகள் களஞ்சியப்படுத்தும் போது பல்கோணி (polygons) மூலம் எடுத்துக் காட்டப்படும் விடயங்களைப் பின்வரும் விடைகளி லிருந்து தெரிவு செய்க.
1) வீதி 2) கால்வாய் 3) கட்டடம்
4) கிணறு 5) பயிர்ச் செய்கை நிலம் ( )

6) பூகோள இடநிலைப்படுத்தல் முறைமை (Global positioning system) அடிப்படைப் பிரிவுகளின் எண்ணிக்கை
1) 03 2) 04 3) 06 4) 07 5) 08 ( )

7) பின்வரும் தகவல்களில் தொடர்ச்சியற்ற தரவுகளைத் தெரிவு செய்க.
1) ஒரு வகுப்பறையில் இருக்கும் மாணவர்களின் உயரம்.
2) குறிப்பிட்ட மாதத்தில் பிறந்த பிள்ளைகளின் நிறை.
3) ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தின் வருடாந்த வெப்நிலைப்பரம்பல்.
4) ஒரு குடும்பத்தில் உள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை.
5) சிறு போகத்தில் இலங்கையின் நெல் உற்பத்தி. ( )

8) தரவுப் பரம்பல் ஒன்றின் சராசரிப் பெறுமானம்
1) இடையம் 2) இடை 3) ஆகாரம்
4) திரள் மீடிறன் 5) ஈராகரம் எனப்படும் ( )

9) தரவுத் தொகுதி யொன்றின் காலணைகளை வரைபு மூலம் எடுத்துக்காட்டும் வரைபடத்தினைப் பின்வரும் விடைகளில் இருந்து தெரிக.
1) கோட்டு நிரல் வரைவு 2) மீடிறன் வரைபு 3) பிரிக்கை வரைபடம்
4) கோட்டு வரைபு 5) பார்வரைபடம் ( )

10) தரவுப்பரம்பல் ஒன்றின் உயர் பெறுமானத்திற்கும் தாழ் பெறு மானத்திற்கும் உள்ள வேறுபாட்டினைப் பின்வரும் விடைகளில் இருந்து தெரிக
1) ஆகாரம் 2) இடையம் 3) இடை
4) விலகல் 5) வீச்சு ( )

agaram.lk

11) மாற்றரிப்பு எல்லை, படைத்தரிப்பு எல்லை, இடைத்தரிப்பு எல்லைகள் காணப்படும் வளிமண்டலத்தின் படைகளை முறையே தெரிவு செய்க.
1) படை மண்டலம், இடை மண்டலம் மாறன் மண்டலம்.
2) மாறன் மண்டலம், இடை மண்டலம், படை மண்டலம்.
3) வெப்ப மண்டலம், மாறன் மண்டலம், இடை மண்டலம்.
4) மாறன் மண்டலம், படை மண்டலம், இடை மண்டலம்
5) இடை மண்டலம், படை மண்டலம், வெப்ப மண்டலம் ( )

12) பின்வரும் விடைகளில் சேதன முறையால் உருவான அடையற் பாறைகளைத் தெரிவு செய்க.
1) மணல், மாக்கல் 2) ஜிப்சம், பளிங்குக்கல் 3) நிலக்கரி, எலைட்
4) மணற்கல், சுண்ணாம்புக்கல். 5) உருண்டைக்கற்றிரள், ஜிப்சம் ( )

13) கண்டத்தகடு ஒன்றின் கீழ் சமுத்திரதகடொன்று அமிழும்போது உருவாகும் நிலவுருவத்தினைத் தெரிவு செய்க.
1) மடிப்பு மலைகள் 2) தீவுகள் 3) பிளவுப் பள்ளத்தாக்குள்
4) விசிறி மடிப்பு 5) அகழிகள் ( )

14) எரிமலை கக்குகையினால் உருவாகும் தள்ளல் நிலவுருவங்களில் ஒன்று.
1) வில்லைத் தீப்பாறை 2) சீதர்மரவடிவத் தீப்பாறை
3) குழிவுத் தீப்பாறை 4) கூட்டெரி மலை
5) ஆட்பிளவுக் கற்குகை. ( )

15) பிரதான ஆறு, பல சிறிய ஆறுகளைத் தன்னோடு இணைத்து அதுகொண்டு பாயும் போது உருவாவது எனப்படும்.
1) பானைக் குழி 2) ஆற்று மலையிடுக்கு 3) ஆற்றுச்சிறை
4) பின்னிய ஆறு 5) வெள்ளச் சமவெளி ( )

16) மத்திய கோட்டு வலயத்திலும், தாழ் அகலக் கோட்டுப் பிரதேசங்களிலும் பிரதான படிவு வீழ்ச்சியாக அமைவது.
1) மழை 2) மூடுபனி 3) பனித்துளிகள்
4) பனிப்பொழிவு 5) ஆலங்கட்டி மழை ( )

17) வளிக் கோளத்தின் சுற்றோட்டத்தில் இரண்டாம் நிலைச் சுற்றோட்டத்தில் உள்ளடங்கும் காற்று வகைகள் எவை?
1) வியாபாரக்காற்று, மேலைக்காற்று 2) சூறாவளி, முரண் சூறாவளி
3) பருவக்காற்று, சூறாவளி 4) வியாபாரக்காற்று, சூறாவளி
5) மேலைக்காற்று, முரண் சூறாவளி ( )

18) கெப்பனின் காலநிலைப்பாகுபாட்டிற்கு அடிப்படையாக அமைந்த நியதிகள்
1) வெப்பநிலை, இயற்கைத் தாவரம் 2) மழை வீழ்ச்சி, இயற்கைத் தாவரம்
3) மண், மழை வீழ்ச்சி 4) மண், இயற்கைத் தாவரம்
5) வெப்பநிலை, மழைவீழ்ச்சி ( )

19) பூகோள பச்சை வீட்டு வாயுவை அதிகளவில் வெளியிடும் பிரதான துறை.
1) கைத்தொழில் 2) காடழிப்பு 3) சக்திவலு
4) போக்குவரத்து 5) விவசாயம் ( )

20) ஓக், பீச், பேச், மேபிள், எலம், செஸ்றட் போன்ற தாவரங்கள் காணப்படும் உயிரப் பெருந்திணிவு
1) மத்திய தரைக் காடுகள் 2) அயன மழைக் காடுகள்
3) இடைவெப்பவலயக்காடுகள் 4) சவன்னா புல்நிலங்கள்
5) ஊசியிலைக்காடுகள் ( )

agaram.lk

21) பின்வருவனவற்றிலிருந்து குளிர்ப்பாலை வனங்கள் உள்ளடங்கிய விடைத்தொகுதியைத் தெரிவு செய்க

1) சகாரா, கலகாரி, கோபி
2) சகாரா, ஒறிகோன், அற்றகாமா
3) கோபி, கலகாரி, அற்றகாமா
4) சகாரா, கலகாரி, அற்றகாமா
5) கோபி, நெவடாஇடகோ, ஒறிகோன் ( )

22) பின்வருவனவற்றிலிருந்து இலங்கையில் அதிவிசேட சரணாலயங்கள் கொண்ட விடைத் தொகுதியைத் தெரிவு செய்க.

1) ஹக்கல, யால, றிதிகல
2) வில்பத்து, புந்தல, வஸ்கமுவ
3) விக்டோரியா, இரந்தனிகல, இரந்தம்மை
4) முத்துராயவெல, தண்டிக்குளம், புந்தல
5) யால, ரிதிகல, புந்தல. ( )

23) சூறாவளி, வெள்ளப் பெருக்கு, இடி மின்னல், வரட்சி, பனிமலை வீழ்ச்சி போன்றன

1) புவிச்சரிதவியல் ரீதியான இடர்கள்
2) காலநிலையியல் ரீதியான இடர்கள்
3) உயிரியல் சார் இடர்கள்
4) பல்வகை இடர்கள்
5) குறிப்பிட்ட வலயங்களில் ஏற்படக் கூடிய இடர்கள் ஆகும். ( )

24) ஈரநிலங்கள் பாதுகாப்பு தொடர்பான உடன் படிக்கை.

1) மொன்றியல் உடன்படிக்கை.
2) கெப்பனேகன் உடன்படிக்கை
3) ரம்சார் உடன்படிக்கை.
4) கியூட்டோ உடன்படிக்கை
5) றியோடி ஜெனிரோ உடன்படிக்கை ( )

25) காற்றின் வேகத்தினை அளவிடப் பயன்படும் கருவி.

1) அனிமோமானி
2) போபேட் அளவுத்திட்டம்
3) அமுக்க மானி
4) வெப்ப மானி
5) ஈரப்பதமானி ( )

26) 2019 ஆண்டிற்கான உலகின் மிகச் சிறந்த புகைப்படம் எடுக்கக்கூடிய சுற்றுலா நகரமாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருப்பது

1) சிங்கப்பூர்
2) யொக்ககாமா
3) லண்டன்
4) றியோடி ஜெனிரோ
5) கொழும்பு ( )

27) குறிப்பிட்ட தொரு நிச்சயிக்கப்பட்ட புவியியல் அலகினுள் குறித்ததொரு காலப்பகுதியில் வாழுகின்ற முழுமக்களின் எண்ணிக்கைக்கு வழங்கப்படும் கலைச் சொல்லினைப் பின்வரும் விடைகளிலிருந்து தெரிவு செய்க.

1) குடித்தொகை
2) குடித்தொகை வளர்ச்சி
3) குடித்தொகைப்பரம்பல்
4) குடித் தொகை அடர்த்தி
5) குடித்தொகை இடப்பெயர்வு ( )

28) ஒருநாட்டின் உற்பத்திச் செயற்பாடுகளை விட நுகர்வு மீது செல்வாக்குச் செலுத்தும் வயதுத் தொகுதியினர்.

1) 19 – 25
2) 26 – 32
3) 33 – 39
4) 40 – 46
5) 60 - 66 ( )

29) இலங்கையில் அதிகளவு பிறப்பு வீதத்தினையும்,குறைந்தளவு பிறப்பு வீதத்தினையும் கொண்டுள்ள மாவட்டங்கள் முறையே,

1) கேகாலை – மாத்தளை
2) கிளிநொச்சி – முல்லைத்தீவு
3) புத்தளம் - மன்னார்
4) கண்டி – காலி
5) பதுளை - வவுனியா ( )

30) இலங்கையின் நகரம் என்ற வரையறைக்குள் உட்படாத ஆனால் நகர செயற்பாடுகளை மேற்கொண்டு வரும் சேவை நிலையமாகச் செயற்படும் நகரம்.

1) மாலபே
2) ஹோமாகம்
3) அதுருகிரிய
4) பத்தரமுல்ல
5) இராஜகிரிய ( )

agaram.lk

31) இலங்கையில் மரபணுத் தொழில்நுட்பம் அதிகமாகப் பயன்படுத்தப்படும் பயிர்ச் செய்கை
1) நெற்பயிர்ச் செய்கை 2) தேயிலைப்பயிர்ச்செய்கை
3) சிறு ஏற்றுமதிப் செய்கை 4) பழச் செய்கை
5) புகையிலைச் செய்கை ( )

32) கனிய எண்ணையைப் பிரதானமாக உற்பத்தி செய்யும் நாடுகளே இறக்குமதியிலும் பிரதான இடத்தினை வகித்து வருகின்றன. அந்நாடுகளைப் பின்வரும் விடைகளிலிருந்து தெரிவு செய்க
1) ஐக்கிய அரபுக்குடியரசு, ஈரான் 2) குவைத், ரஷ்யா 3) ஐக்கிய அமெரிக்கா, சீனா
4) இந்தியா, வெனிசுவெலா 5) ஐப்பான், இத்தாலி ( )

33) உலகில் உயர்தரமான இரும்புத்தாதுப் படிவுகளைக் கொண்டுள்ள சீனாவில், அப்படிவு அதிகளவு பரந்துள்ள மாகாணத்தினைத் தரும் விடையினைத் தெரிவுசெய்க.
1) ஷாங்ஸி மாகாணம் 2) பூஜியன் மாகாணம் 3) கைநான் மாகாணம்
4) யுனான் மாகாணம் 5) ஜினாக்ஷி மாகாணம் ( )

34) இலங்கையில் மைக்கா வகைக் காரியப்படிவு பரந்துள்ள மாவட்டங்களின் ஒன்று.
1) இரத்தினபுரி 2) கேகாலை 3) குருநாகல்
4) மாத்தளை 5) மொனராகலை ( )

35) இலங்கையில் காணப்படும் அப்பதைற்றைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் பசளைகள் இரண்டு
1) HERP, ERP 2) CAN, ERP 3) AS, HERP
4) AC, ERP 5) ERP, AS ( )

36) இந்தியாவில் நிலக்கரிக்குப் பதிலாக தாராப்பூரில் அமைந்துள்ள அணு சக்தியினைப் பயன்படுத்துகின்ற கைத்தொழில் வலயங்கள்.
1) சென்னை, பூனே 2) கொல்கத்தா, மும்பை 3) மும்பை, டெல்கி
4) கொல்கத்தா, டெல்கி 5) மும்பை, பூனே ( )

37) சார்க் அமைப்பு அங்கத்துவ நாடுகளின் சுற்றுலாக் கைத்தொழிலை மேம்படுத்துவதற்காக மேற்கொண்ட பிரதான நடவடிக்கைகளில் ஒன்று
1) சம்பிரதாய பூர்வமற்ற சந்தைகளில் சுற்றுலாப் பயணிகளை ஈர்த்துக் கொள்ளலாம்.
2) சுற்றுலாப் பயணிகளின் நாளாந்த செலவுகளை அதிகரித்ததமை.
3) 2006 ஆம் ஆண்டை தென்னாசிய சுற்றுலா வருடமாகப் பிரகடனப் படுத்தியமை.
4) அங்கத்துவ நாடுகளிடையே தங்குமிடங்கள் (Hotels) வசதியை மேம்படுத்தியமை.
5) தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தியமை. ( )

38) இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் பிரதான நோக்கம்
1) ஓய்வு, பொழுதுபோக்கு 2) உறவினர் சந்திப்பு
3) வர்த்தக நடவடிக்கை 4) வரலாற்று இடங்கள் தொடர்பான கற்றல்
5) இலங்கையின் பழக்கவழக்கங்களை அறிந்து கொள்வதற்கான ஆராய்ச்சி ( )

39) இலங்கைச் சுற்றுலா சபை பிரகடனப்படுத்தியுள்ள சுற்றுலா வலயங்களின் எண்ணிக்கை.
1) 15 2) 12 3) 10 4) 07 5) 05 ( )

40) பூகோளமயமாதலைத் துரிதப்படுத்திய பிரதான காரணிகள்.
1) வங்கிவசதி, போக்குவரத்து
2) தகவல் தொடர்பாடல், உட்கட்டமைப்புவசதி
3) வான், தரை, கடல் போக்குவரத்து விருத்தி
4) கைத்தொழில் மயமாதல்
5) குடியேற்ற நாடுகள் சுதந்நிரம் அடைந்தமை ( )

(40 x 1 = 40 புள்ளிகள்)

agaram.lk

பகுதி – II

1) இலங்கை நில அளவைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 1:50,000 என்ற அளவுத்திட்டத்திலமைந்த இடவிளக்கப்படத்தின் ஒரு பகுதி உமக்குத் தரப்பட்டுள்ளது. அதில் சமவுயரக் கோடுகளின் இடைவெளி 20 மீற்றரினால் காட்டப்பட்டுள்ளது. அப்படத்தினைப் பயன்படுத்திப் பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

(i) A சதுரத்தில் காணப்படும் சேவைநிலையங்கள் நான்கினைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) a) உமக்குத் தரப்பட்ட பிரதேசத்தின் வடகிழக்குப் பகுதியில் காணப்படும் நிர்வாக எல்லையைப் பெயரிடுக. (0.5 புள்ளிகள்)

b) 1, 2, 3 இலக்கங்களால் குறித்துக் காட்டப்பட்டிருக்கும் விடயங்களை அதே ஒழுங்கில் எழுதுக. (1.5 புள்ளிகள்)

(iii) இப்பிரதேசத்தில் செய்கை பண்ணப்படுகின்ற பெருந்தோட்டப் பயிர்கள் இரண்டினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(iv) a) சதுரம் A யினை 1:25000 ஒன்று அளவுத்திட்டத்தில் வரைந்து காட்டுக. (02 புள்ளிகள்)

b) 1:25000 அளவுத்திட்டத்தின் நேர்கோட்டளவுத் திட்டத்தினை வரைக. (02 புள்ளிகள்)

(v) X இன் அமைவிடத்திற்குக் குறுக்காக விரிடைந்து செல்லும் அகல, நெடுங்கோடுகளைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

(vi) படப்பிரதேசத்தின் பயிர்ச் செய்கைப்பரம்பலைத் தீர்மானித்த காரணிகளை விளங்குக. (04 புள்ளிகள்)

(vii) படப்பிரதேசத்தில் வீதி வலைப்பின்னலுக்கும், பௌதிக அம்சங்களுக்கும் இடையிலான தொடர்பினை விளக்குக. (04 புள்ளிகள்)

2) அரசியல் எல்லைகள் பிரித்துக் காட்டபட்ட உலகப்படமொன்று உமக்கு வழங்கப்பட்டுள்ளது. பொருத்தமான குறியீடுகள், நிறங்களைப் பயன்படுத்திப் பின்வருவற்றைக் குறித்து பெயரிடுக.

i) அகுகாஸ் நீரோட்டம் (திசையுடன்)

ii) பற்றக் கோனியாப் பாலைவனம்

iii) றொக்கி மலைத் தொடர்

iv) குவாங்கோ நதி

v) பரீஸ்

vi) கியூபா

vii) போக்குவரத்தினடிப்படையில் கைத்தொழில் விருத்தியடைந்த ஆசிய நகரம்

viii) பெற்றோலியம் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் அமைப்பு (OPEC) இன் தலைமையகம் அமைந்துள்ள நகரம்.

ix) உலக நெல் உற்பத்தியில் இரண்டாவது இடத்தினை வகிக்கும் நாடு.

x) ஆபிரிக்காவின் மிகப் பெரிய நகரம். (10 புள்ளிகள்)

பகுதி – III

3)

(i) தரவு என்றால் என்ன? (02 புள்ளிகள்)

(ii) தரவுகளின் வகைகள் நான்கினையும் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) மேலே குறிப்பிட்ட தரவுவகைகளில் இரண்டினை விளக்குக. (06 புள்ளிகள்)

(iv) மையநாட்ட அளவீடுகள்(Cetral Tendency) மூன்றினையும் தருக (03 புள்ளிகள்)

agaram.lk

4) அட்டவனை 01 இல் 2006 – 2015 வரையான இலங்கையின் நெல் உற்பத்தி தரப்பட்டுள்ளது

அட்டவணை 01. இலங்கையின் நெல் உற்பத்தி

ஆண்டு	உற்பத்தி
2006	2136
2007	1973
2008	2125
2009	2384
2010	2630
2011	1996
2012	2717
2013	2846
2014	2236
2015	2877

மூலம் சத்தொகை, புள்ளிவிபரவியல் திணைக்களம்

(i) இடையைக் கணிக்க. (01 புள்ளிகள்)

(ii) இடைவிலகலைக் கணிக்க. (04 புள்ளிகள்)

(iii) மேலே (ii) யில் பெறப்பட்ட விலகல பெறுமானங்களைப் பயன்படுத்தி இலங்கையின் 2006-2015 வரையான உற்பத்தியின் விலகலைக்காட்டும் படம் ஒன்றினை வரைக (07 புள்ளிகள்)

(iv) உம்மால் வரையப்பட்ட வரைபின் அடிப்படையில் இலங்கையின் நெல் உற்பத்தி தொடர்பாக விபரணம் செய்க. (03 புள்ளிகள்)

5) ஒரு வருடத்திற்கான வெப்பநிலை மழைவீழ்ச்சி தொடர்பான தகவல்களை வரைபடம் 01 எடுத்துக்காட்டுகின்றது. தரப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்திப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

வரைபடம் 01



(i) வரைபடத்தின் வகையைப் பெயரிடுக. (03 புள்ளிகள்)

(ii) வெப்பநிலை, மழைவீழ்ச்சிப் பரம்பல் தொடர்பான இரண்டு முனைப்பான அம்சங்களை விபரிக்குக. (05 புள்ளிகள்)

(iii) மேற்படி வரைபின் பண்பினைக் குறிப்பிட்டு விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) மேற்படி தரவுகளை வரைந்து காட்டுவதற்குப் பொருத்தமான பிறிதொரு படைவரைகலை நுட்ப முறையினைப் பெயரிடுக (02 புள்ளிகள்)

agaram.lk

6)

(i) தொலையுணர்வுத் தொழில் நுட்பம் (Remote Sensing-Rs) என்றால் என்ன? (02 புள்ளிகள்)

(ii) தொலையுணர்வு தொழில்நுட்ப தொடர்புகளின் போது தரவு சேகரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் முறைகளைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) மேலே (ii) குறிப்பிட்ட முறைகளைக் சுருக்கமாக விபரிக்குக. (06 புள்ளிகள்)

(iv) தொலையுணர்வுத் தொழில்நுட்பத்தின் பிரயோகங்கள் தொடர்பாக விளக்குக? (04 புள்ளிகள்)

agaram.lk

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

FWC

Field Work Centre

தவணைப் பரீட்சை மார்ச் - 2019

Term Examination, March - 2019

தரம் :- 13 (2019)	புவியியல் - I	நேரம் :- 3 மணித்தியாலம் மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடம்

அறிவுறுத்தல்கள்.

- ❖ **ஒவ்வொரு பகுதியிலிருந்தும் குறைந்த பட்சம் இரண்டு வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**
- ❖ **உலகப்படம் ஒன்று வழங்கப்படும்.**

பகுதி – I
பௌதிகப் புவியியல்

01)

(i) தரப்பட்ட உலகப்படத்தில் பின்வரும் தகடுகளைக் குறித்துப் பெயரிடுக.
A. ஐரோ ஆசியத் தகடு.
B. தென்னமரிக்கத் தகடு.
C. பசுபிக் தகடு.
D. ஆபிரிக்கத் தகடு. *(02 புள்ளிகள்)*

(ii) தகடுகள் அசைவிற்கு உள்ளாகும் மூன்று முறைகளைக் குறிப்பிட்டு விளக்கப்படங்களின் உதவியுடன் விளக்குக. *(06 புள்ளிகள்)*

(iii) தகட்டசைவினால் ஏற்படும் விளைவுகள் மூன்றினைக் குறிப்பிட்டு அதில் ஒன்றினை விபரிக்குக. *(06 புள்ளிகள்)*

(iv) புவியசைவுகளில் கிடையாகத் தொழிற்படும் அமுக்க விசையினால் ஏற்படும் நிலவுருவங்கள் மூன்றினை விளக்கப்படங்களின் உதவியுடன் விளக்குக. *(06 புள்ளிகள்)*

02)

(i) கடற்கரையோரத்தின் நான்கு வகைகளையும் குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*

(ii) கரையோர நிலவுருவங்களை உருவாக்குவதில் செல்வாக்குச் செலுத்தும் அரித்தல் கருவிகளில் ஒன்றான அலையின் தொழிற்பாட்டினை விளக்குக. *(06 புள்ளிகள்)*

(iii) கரையோர அரிப்பினால் உருவாகும் நிலவுருவங்களைக் குறிப்பிட்டு விளக்குக. *(06 புள்ளிகள்)*

(iv) கரையோர அரிப்பினால் உருவாகும் படிதல் நிலவுருவங்கள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்கப்படங்களின் உதவியுடன் விளக்குக. *(06 புள்ளிகள்)*

03)

(i) உயிரினக் கூட்டம் / உயிர்ப்பெருந்திணிவுகள் என்பதனை வரையறை செய்க. *(03 புள்ளிகள்)*

(ii) உலகின் பிரதான உயிரினக் கூட்டங்களைக் குறிப்பிடுக. *(04 புள்ளிகள்)*

(iii) இலங்கையின் சூழற்தொகுதிகள் எதிர் நோக்குகின்ற பிரச்சினைகள் மூன்று குறிப்பிட்டு விபரிக்குக. *(06 புள்ளிகள்)*

(iv) இலங்கையின் சூழற்தொகுதிப் பாதுகாப்பதற்கு மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளை உதாரணங்களுடன் விளக்குக. *(07 புள்ளிகள்)*

04)

(i) புவியில் காணப்படும் நீரின் பல்வேறு நிலைகளைக் குறிப்பிடுக. *(03 புள்ளிகள்)*

(ii) புவியில் நீர் பரம்பிக் காணப்படும் மூன்று முறைகளையும் குறிப்பிட்டு விளக்குக. *(05 புள்ளிகள்)*

(iii) நீர்வளம் மாசடைவதற்குக் காரணமான மனித நடவடிக்கைகளைக் குறிப்பிட்டு விளக்குக. *(06 புள்ளிகள்)*

(iv) நீர் வளத்தினைப் பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளைக் குறிப்பிட்டு விளக்குக. *(06 புள்ளிகள்)*

agaram.lk

பகுதி – II
மானிடப் புவியியல்

05)

(i) நகராக்கம் என்றால் என்ன? (02 புள்ளிகள்)

(ii) நகரம் என்பதனை வரையறை செய்வதற்கு அல்லது இனம் காண்பதற்கு உலக நாடுகள் பயன்படுத்துகின்ற நியதிகள் மூன்று குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் நகரமயமாக்கத்துடன் இணைந்து காணப்படும். பிரச்சினைகளைப் பகுத்தாராய்க. (08 புள்ளிகள்)

(iv) இலங்கை நகராக்கத்தின் புதிய போக்குகளை விபரிக்குக. (07 புள்ளிகள்)

06)

(i) சேதன விவசாயம் என்றால் என்ன? (03 புள்ளிகள்)

(ii) சேதன விவசாயத்தில் பயன்படுத்தப்படும் முறைகளைக் குறிப்பிட்டு விளக்குக. (05 புள்ளிகள்)

(iii) சேதனப் பயிர்ச்செய்கையின் நன்மைகளைக் குறிப்பிட்டு விளக்குக. (06 புள்ளிகள்)

(iv) இலங்கையின் விவசாயத்துறை எதிர்நோக்கும் சவால்களைக் குறிப்பிட்டு விளக்குக. (06 புள்ளிகள்)

07)

(i) உற்பத்திக் கைத்தொழில், அகழ்வுக் கைத்தொழில் பாகுபடுத்துக. (04 புள்ளிகள்)

(ii) இரும்புத்தாதின் வர்த்தக முக்கியத்துவத்தினைச் சுருக்கமாகக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) சுரங்கக் கைத்தொழில் சார்ந்த பிரச்சினைகள் மூன்று குறிப்பிட்டு விளக்குக. (06 புள்ளிகள்)

(iv) இலங்கையின் பிரதேச அபிவிருத்தியில் கனிய வளங்களின் பங்களிப்புத் தொடர்பாக குறிப்பிட்டு விளக்குக. (06 புள்ளிகள்)

08)

(i) இலங்கைக்குச் சுற்றுலாப் பயணிகள் வருகை தருவதற்கான காரணங்களை இரண்டு குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) இலங்கையின் சுற்றுலா துறையில் காணப்படுகின்ற பிரிவுகளைக் குறிப்பிட்டு விளக்குக. (06 புள்ளிகள்)

(iii) இலங்கையின் சுற்றுலாக் கைத்தொழிலுடன் தொடர்புபட்ட பொருளாதார சமூக, கலாசாரத் தாக்கங்களைக் குறிப்பிட்டு விளக்குக. (06 புள்ளிகள்)

(iv) இலங்கையின் சுற்றுலாக் கைத்தொழிலை மேம்படுத்துவதற்கு மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகளை விபரிக்குக. (06 புள்ளிகள்)

agaram.lk